Bishop George Rajendran sdb

Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

"With God all things are possible"

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/60/2025

ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே!
அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும்
ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

நமது மறைமாவட்டத்தில் 7-வது அருட்பணிப்பேரவை 1-5-2024 இல் தொடங்கப்பட்டு, அதனுடைய மூன்றாவது கூடுகை 1-5-2025 அன்று சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில் உயர்பேராய மாமன்றத்தின் செயல் திட்டங்கள் முக்கிய கருத்தாக எடுக்கப்பட்டு கலந்துரையாடல் நடைபெற்றது. ஆயர் தலைமையில் தொடக்க உரையுடன் இக்கூடுகை ஆரம்பிக்கப்பட்டது. அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் கருத்துரை வழங்கினார். அருட்பணிப்பேரவையின் 101 உறுப்பினர்களில் 57 உறுப்பினர்கள் இக்கூடுகையில் கலந்து கொண்டனர். பேரவை கூடுகையில் கலந்து கொண்டு அரிய கருத்துக்களை வழங்கிய உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். அருட்பணிப் பேரவைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் தவறாமல் பேரவை கூடுகைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் உறுப்பினர்களின் பங்கேற்பை பங்கு தந்தையர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

அக்கூடுகையில் நடைபெற்ற அருட்பணிப்பேரவை உறுப்பினர்களின் கருத்துப் பரிமாற்றத்தை, உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

கேள்வி:1. விசுவாசப் பயிற்சி அனைத்து வயதினரையும் சென்றடைகின்றதா? அதன் சவால்களை எதிர்கொள்ள நாம் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் என்னென்ன?

இக்கேள்விக்கு அருட்பணிப்பேரவை உறுப்பினர்கள், நமது மறைமாவட்டத்தில் விசுவாச பயிற்சி அனைத்து வயதினரையும் முறையாக சென்றடையவில்லை என்ற கருத்தை முன்வைத்தனர். நமது மறைமாவட்டத்தில் விசுவாசப் பயிற்சியை ஊக்குவிக்க நாம் அனைவரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். நாம் பெற்ற ஆழமான விசுவாசத்தை நமது பிள்ளைகள், இளையோர், முதியோர் உட்பட அனைத்து தரப்பினருக்கும் சென்றடையும் வகையில் பகிர்ந்து அளிக்க வேண்டும். அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் இணைந்து விசுவாசப் பயிற்சியை பங்கு மக்களுக்கு பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும். இதனை ஒவ்வொரு பங்கு தந்தையரும் முக்கிய கருத்தாக கொண்டு செயல்பட வேண்டும்

என்றும் நினைவூட்டுகிறேன். பங்கு அளவில் விசுவாச பயிற்சி அளிக்க ”விசுவாச பயிற்சி குழு” ஒன்றை அமைத்து விசுவாச பயிற்சிக்கான செயல் திட்டங்களை வரையறுக்க இத்தருணத்தில் உங்களை கேட்டுக்கொள்கின்றேன். இக்குழு, கத்தோலிக்க விசுவாச கோட்பாடுகளை விதைத்தல், பெற்றோருக்கு மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சீரோ மலபார் திருச்சபையின் திருமரபுகளை கற்பித்தல், பக்த இயக்கங்களில் ஆன்மீக எழுச்சி ஊட்டுதல், மக்களிடையே ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்த குடும்பச் சந்திப்புகளை மேற்கொள்ளுதல், நோயாளிகளை சந்தித்தல், ஏழை எளியோரை கவனித்தல் போன்ற ஆன்மீக பணிகள் இன்றைய காலத்தின் கட்டாயம் என கருத வேண்டும். புனித லூக்கா நற்செய்தி 4 ம் அதிகாரம் 18 முதல் 19 வரையுள்ள இறைவார்த்தைகள் இதையே குறிப்பிடுகிறது. ‘ஏழைகளுக்கு நற்செய்தி அறிவித்தல், சிறைப்பட்டோருக்கு விடுதலை அளித்தல், பார்வையற்றோர் பார்வை அடைதல், ஒடுக்கப்பட்டோரின் விடுதலை மற்றும் ஆண்டவரின் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவித்தல்’ போன்ற நற்பணிகளை மேற்கொள்ள கடவுள் நமக்கு அழைப்புவிடுகின்றார். மேலும் அருட்தந்தையர்கள் மறையுரையின் போது திருப்பலி, திருவருட்சாதனங்கள், திருமரபுகள் பற்றிய இறையியல் விளக்கங்களை மக்களுக்கு தொடர்ந்து வழங்குவதும் நமது விசுவாச பயிற்சியை மேலும் வலுப்படுத்த உதவும் என கருத்து வழங்கப்பட்டது.

கேள்வி:2. நற்செய்தி பணியில் பொதுநிலையினரின் பங்கேற்பு எவ்வாறு உள்ளது? சீரோ மலபார் திருச்சபையோடு இணைந்து அதனை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் என்னென்ன?

நற்செய்தி பணியில் பொதுநிலையினரின் பங்கேற்பு சற்று குறைவாகவே நமது மறைமாவட்டத்தில் காணப்படுகிறது என்று அருட்பணிப் பேரவையினர் கருத்து தெரிவித்தனர். எனவே, பங்கு மக்களாகிய நாம் அனைவரும் தத்தம் வாழ்க்கை முறைக்கு ஏற்ப மறைமாவட்ட அளவில், தங்களது பங்கேற்பை உறுதி செய்ய முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று இவ்வேளையில் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். சீரோ மலபார் திருச்சபையில் நமது மறைமாவட்டம் இன்றும் ஒரு திருத்தொண்டு மறைமாவட்டமாகவே செயல்பட்டு வருகிறது. கன்னியாகுமரி முதல் மதுரை-தேனி வரை பரந்து விரிந்த திருத்தொண்டு தளங்களில் நமது மறைமாவட்டத்தை சார்ந்த அருட்தந்தைகளும், அருட்சகோதரிகளும், பொதுநிலையினரும் திருத்தொண்டு பணியாற்றி வருகின்றனர் என்பதை நாம் அறிவோம். இத்திருத்தூது பணி சிறப்புற அமைய ஒவ்வொருவரும் ஜெபங்களை ஏறெடுத்தல், மறைத்தொண்டு தளங்களை சந்தித்தல், இயன்ற அளவு பொருளுதவி அளித்தல் போன்ற நற்செயல்களை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

ஒவ்வொரு பங்கிலும் தொடங்கப்பட்ட “திருத்தொண்டு பணிக்குழுவை” வலுப்படுத்துதல், இதுவரை தொடங்காத இடங்களில் இத்திருச்சபை வளர்ச்சி காலத்தில் ஒரு “திருத்தொண்டு பணிக்குழுவை” உருவாக்கிட முயற்சி மேற்கொண்டு குழு உறுப்பினர் பட்டியலை இம்மாத இறுதிக்குள் மறைமாவட்ட இயக்குனரிடம் தெரிவிக்கவும் கேட்டுக்கொள்கிறேன். இக்குழுவானது, ஈசோமிசிகாவை ஆண்டவராக

ஏற்றுக்கொள்ளாத மக்களுக்கு நற்செய்தி அறிவித்தல், இறை மக்களை நம்பிக்கையில் மேலும் ஆழப்படுத்துதல், கத்தோலிக்க விசுவாச வாழ்வில் இருந்து அகன்று செல்வோரை அரவணைத்தல், புதிதாக நமது பங்குகளில் உறுப்பினர்களான விசுவாசிகளை சீரோ மலபார் திருச்சபையில் வேரூன்றி நிலைநிற்க செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு குடும்பங்களிலும் குடும்ப ஜெபம் அன்றாடம் நடைபெறுவதை நாம் உறுதி செய்வதோடு, திருத்தொண்டு பணிக்காகவும், திருத்தொண்டு பணியாளர்களுக்காகவும், இறைஅழைத்தலுக்காகவும், உலக அமைதிக்காகவும் சிறப்பு செபங்கள் ஏறெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் புதிய ஒரு திட்டத்தை கிறிஸ்து பிறப்பின் இவ்யூபிலி ஆண்டில் உங்களிடம் தெரிவிக்க விரும்புகின்றேன். நமது பல்வேறு பங்குகளில் இந்த ஆண்டு திருவிவிலியம் முழுவதும் வாசித்து தியானிக்கும் செயல் திட்டம் நடைபெற்று வருகிறது என்பதை நான் அறிவேன். அதோடு 100 மேனி பலன் கொடுப்பவர்களாக நாம் மாற நற்செய்தி நூல்கள் முழுவதையும் மனப்பாடம் செய்வது நல்லது என்று நான் நினைக்கின்றேன். அதற்காக சிறுமலர் இயக்கத்தின் சார்பில் ”நூறு மேனி” என்னும் கையேடு 4 நற்செய்தி நூல்களையும் மையப்படுத்தி 500 இறைவார்த்தைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அனைத்து பங்குகளும் பங்கேற்கும் மறை மாவட்ட அளவிலான போட்டி நடத்துதல் நல்லது என எண்ணுகின்றேன். இப் போட்டிக்கான விதிமுறைகள் இம்மாதம் 15 ஆம் தேதிக்குள் உங்கள் பங்குத்தந்தை வழியாக வழங்கப்படும். பங்கேற்கும் உங்களது பெயர் பதிவை ஆகஸ்ட் 30க்குள் பதிவு செய்யவும் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதில் ஒவ்வொரு பங்கிலிருந்தும் வயது வித்தியாசம் இன்றி திரளாக மக்கள் பங்கேற்க வேண்டும் எனவும் நான் அறிவுறுத்துகிறேன். நற்செய்தி நூல்களை நாம் ஆழமாக படித்து அதன்படி வாழ நமக்கு இது வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு வயதினருக்கும் ஏற்றவாறு இப்போட்டியானது நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மறை மாவட்ட சிறுமலர் இயக்க இயக்குனரோடு ஒரு குழுவினர் முன்னின்று வழிநடத்துவார்கள் என்ற தகவலையும் தெரிவிக்கிறேன். இவ் யூபிலி ஆண்டை வெற்றியடையச் செய்யும் நல் முயற்சியாக இதை பார்க்கிறேன். அனைவரும் அன்புடன் ஒத்துழைத்து இறையரசில் பங்கேற்போம்.

இறைவன் உங்கள் அனைவரையும் உங்கள் முயற்சிகளையும் உங்கள் தேவைகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
07.08.2025

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இச்சுற்றுமடலை 10.08.2025, ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் வாசிக்க வேண்டும்.